விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கரோனா வைரஸ் பரவும் விதம், நோய் தடுப்பு முறைகள், சுகாதார முறைகள், கை கழுவும் முறை ஆகியவை பற்றி விவரித்தனர். கோவிலுக்கு சென்று அங்கு இருந்த மக்களிடமும், அருகில் தெருவில் இருந்த வீடுகளில் உள்ள மக்களிடமும் கரோனா பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் படங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் விளக்கினர். கை கழுவும் முறை பற்றிய செயல் முறை விளக்கம் அளித்தனர். நோய் அறிகுறிகள் தென்பட்டால், உடனே மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

